செ.வெ.எண். 13 நாள் - 10.11.2020

**நீலகிரி மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் நவம்பர் மாதம் 7 முகாம்களும், டிசம்பர் மாதம் 11 முகாம்களும், ஜனவரி மாதம் 7 முகாம்களும் மற்றும் பிப்ரவரி மாதம் 4 முகாம்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

தமிழக முதலமைச்சர் அவர்கள், கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப் பெறாத கிராமங்களில், கால்நடைகளின் நலனை பாதுகாக்கும் பொருட்டு கால்நடை பாதுகாப்பு முகாம் நடத்த அறிவுறுத்தியுள்ளார். இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்புத்திட்டம் 2020-21 ன் கீழ் ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ஒரு முகாம் வீதம் 29 முகாம்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நவம்பர் மாதம் 7 முகாம்களும், டிசம்பர் மாதம் 11 முகாம்களும், ஜனவரி மாதம் 7 முகாம்களும் மற்றும் பிப்ரவரி மாதம் 4 முகாம்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், ஆணைமை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது. தங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம் நாளினை தெரிந்து விவசாயிகள் இந்த வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்